# இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு,
பாடசாலை மாணவர்களின் வாசிப்புத்திறனை ஊக்கப்படுத்தும் நோக்கில் நடாத்தும்

**நூலறிவுப் போட்டி - 2020**

**அறிவுறுத்தல்**

- மாணவர்களின் வாசிப்பு மற்றுந் தேடலை ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இப் போட்டி நடாத்தப்படுகிறது.
- இவ்வினாக்களிற் பெரும்பாலானவை *ஸ்ரீலஸ்ரீ*ஆறுமுகநாவலர் பெருமான் எழுதிய, உரைவகுத்த, பரிசோதித்த நூல்களை உள்ளடக்கியவை.
- விடைத்தாள்கள் ஒப்படைக்க வேண்டிய இறுதித் திகதி 15.08.2020ஆகும்.
- வெற்றியாளர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பெறுமதியான பரிசில்கள் வழங்கி வைக்கப்படும்.
- விடைத்தாள்களைத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்கலாம். ஒப்படைக்க வேண்டிய இடங்கள்.

| | |
|---|---|
| *ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபம்<br>நல்லூர் ஆலய வளாகம்<br>நல்லூர்.<br>தொ.பே.இல.0775821041, 0774242143* | *இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்<br>வடக்கு மாகாணக் காரியாலயம்<br>(ஆனைப்பந்திக் குருகுலம்)<br>பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி<br>தொ.பே.இல:- 0212225612* |
| *இந்து கலாசார நிலையம்<br>நாவற்குடா,<br>மட்டக்களப்பு.<br>தொ.பே.இல.065 222 3488* | *இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்<br>248- 1/1, காலி வீதி,<br>கொழும்பு - 04<br>தொ.பே.இல:- 0112552641* |

**அலுவலக நேரங்களில் ஒப்படைக்கவும்**

***மாணவர் விபரம்***

**முழுப்பெயர்** : ..............................................................................

**பாடசாலை** : ..............................................................................

**தரம்** : .................................... **தொ.பே.இல:** ...............................

**முகவரி** : ..............................................................................

01. ஔவையார் பாடிய நூல்கள் மூன்றின் பெயர்களைத் தருக.

..........................................................................................................................................................

02. 'நன்னெறி' என்னும் நூலை இயற்றியவர் யார்?

..........................................................................................................................................................

03. ஐம்பூதத் தலங்களில் 'மண்தலம்' எனப் போற்றப்படுவது எது?

..........................................................................................................................................................

04. 'நல்வழி' எனும் நூலின் காப்புச் செய்யுளின் முதலடியை எழுதுக.

..........................................................................................................................................................

05. "பெரியோர் உன்னைச் 'சீ' என்று அருவருக்கும்படி நீ துட்டனாய்த் திரியாதே" என்னும் பொருள் உணர்த்தும் ஆத்திசூடிப் பாடல் எது?

..........................................................................................................................................................

06. 'புட்பவிதி' எனும் நூலின் ஆசிரியர் யார்?

..........................................................................................................................................................

07. 'புட்பவிதி' என்ற நூலின் ஆசிரியரால் எழுதப்பட்ட நூல்களின் பெயர்கள் ஐந்து எழுதுக.

..........................................................................................................................................................

08. 'தியாகராசலீலை' எனும் வடமொழி நூலின் ஆசிரியர் யார்?

..........................................................................................................................................................

09. தேவி மூல மந்திரம் எது?

..........................................................................................................................................................

10. 'தருப்பணம்' என்பதன் பொருள் என்ன?

..........................................................................................................................................................

11. சிவப்பிராமணர்கள் கர்ப்பக்கிருகத்திலும் பிராமணர்கள் அர்த்த மண்டபத்திலும் சத்திரியர்கள் மகா மண்டபத்திலும் நின்று சிவமூல மந்திரத்தினாற் புஸ்பாஞ்சலி செய்ய வேண்டும் எனக் கூறும் ஆகமம் எது?

..........................................................................................................................................................

12. ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவான நமஸ்காரம் எது?

..........................................................................................................................................................

13. "பொன்னார் மேனியனே..." எனுந் தேவாரப் பதிகம் பாடியவர் யார்? அதன் பண் என்ன?

..........................................................................................................................................................

14. "ஆலந்தான் உகந்தமுது செய்தானை..." எனுந் தேவாரத் திருப்பதிகம் எத்தலத்தின்மீது பாடப்பட்டது?

..........................................................................................................................................................

15. “சோம்பலே தீமைக்குந் துன்பத்துக்கும் பிறப்பிடம்” என்பது யார் கூற்று?

.......................................................................................................................................

16. சேக்கிழாரின் பெரியபுராணம் எத்தினத்தில் அரங்கேற்றஞ் செய்யப்பட்டது?

.......................................................................................................................................

17. சேக்கிழார் பெருமானின் தம்பியாரின் பெயர் என்ன?

.......................................................................................................................................

18. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பொற்றாளம் பெற்றது எத்தலத்திலே?

.......................................................................................................................................

19. சங்கிலியாரின் தந்தை பெயர் என்ன?

.......................................................................................................................................

20. திருநீலகண்டப் பெரும்பாணர் திருவவதாரஞ் செய்த இடம் எது?

.......................................................................................................................................

21. ‘திருவாரூர் சைவ சிகாமணி’ எனப் போற்றப்படுபவர் யார்?

.......................................................................................................................................

22. திருநாவுக்கரசு நாயனார் திருவங்க மாலைத் திருப்பதிகம் பாடிய திருத்தலம் எது?

.......................................................................................................................................

23. திருநாவுக்கரசு நாயனார் திருப்பழனத்துச் சுவாமி மீது பாடிய திருப்பதிகம் எது?

.......................................................................................................................................

24. புராணபடனஞ் செய்யக்கூடிய இடங்களாக நாவலர்கூறும் இடங்கள் நான்கு தருக.

.......................................................................................................................................

25. ‘சூ’ என்ற தமிழ் எழுத்துக் குறிக்கும் எண் என்ன?

.......................................................................................................................................

26. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் கூறும் நான்குவகை யாழ்களும் எவை?

.......................................................................................................................................

27. மகாவிஷ்ணு இருக்கு வேதத்தில் எவ்வாறு போற்றப்பட்டார்?

.......................................................................................................................................

28. மகேஸ்வர மூர்த்தங்களுள் ஒன்றான ‘காலாரி வடிவம்’ உணர்த்துங் கதை எது?

.......................................................................................................................................

29. மட்டக்களப்பு மான்மியம் எப்போது யாராற் பதிப்பித்து வெளியிடப்பட்டது?

.......................................................................................................................................

30. திருச்செந்தூர் முருகன் மீது பிள்ளைத் தமிழ் பாடியவர் யார்?

.......................................................................................................................................

31. 'பாகவத மேளம்' என்பது எவ்வகைக் கலை வடிவம்?

.......................................................................................................................................

32. அக்கினி தேவனால் வசிட்ட முனிவருக்கு உரைக்கப்பட்ட புராணம் எது?

.......................................................................................................................................

33. 'திருத்தம்பலேஸ்வரம்' என்பது எவ்வாலயத்தைக் குறிக்கும்?

.......................................................................................................................................

34. 'திருவாரூர் நான்மணிமாலை' பாடியவர் யார்?

.......................................................................................................................................

35. 'மணி பல்லவம்' என்று அழைக்கப்படும் இடம் எது?

.......................................................................................................................................

36. 'நரேஸ்வர பரீட்சா' என்ற நூலின் ஆசிரியர் யார்?

.......................................................................................................................................

37. பரசுராமரின் தந்தையின் பெயர் என்ன?

.......................................................................................................................................

38. விஷ்ணுபகவான் இரணியகசிபு என்ற அசுரனைக் கொன்ற வரலாற்றோடு தொடர்புபட்ட சிவமூர்த்தம் எது?

.......................................................................................................................................

39. சப்தரிஷிகள் எனக் கருதப்படும் நட்சத்திரக் கூட்டத்தின் பெயர் என்ன?

.......................................................................................................................................

40. குமரக் கடவுளால் வாமதேவ முனிவருக்கு உபதேசிக்கப்பட்ட ஆகமம் எது?

.......................................................................................................................................

41. நாவலர் பெருமான் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு முதலாம் பத்திரிகை வெளியிட்ட ஆண்டு எது?

.......................................................................................................................................

42. நாவலர் பெருமான் ஆற்றிய புராண விரிவுரைகளுள் மிகச் சிறந்ததாகக் கொள்ளப்படுவது எது?

.......................................................................................................................................

43. நாவலர் பெருமான் சிதம்பர வித்தியாசாலை தாபித்தது எப்போது?

.......................................................................................................................................

44. கஜமுகாசுரனின் தாய் தந்தை பெயர் என்ன?

.................................................................................................................................................

45. பிரமாவின் ஒரு நாள் என்பது எத்தனை சதுர்யுகங்கள் கொண்டது?

.................................................................................................................................................

46. சலந்தராசுரனின் மனைவி பெயர் என்ன?

.................................................................................................................................................

47. சிவமுனிவரோடு தொடர்புபட்ட கந்தபுராணப் படலம் எது?

.................................................................................................................................................

48. முசுகுந்தச் சக்கரவர்த்தியின் மகனின் பெயர் என்ன?

.................................................................................................................................................

49. சங்கர சங்கிதையில் உள்ளடங்குங் கிரந்தங்கள், காண்டங்கள் எத்தனை?

.................................................................................................................................................

50. கணவனை இழந்தவள் நோற்கும் விரத வொழுக்கம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

.................................................................................................................................................

51. 'தேவகுரு' எனப் போற்றப்படுபவர் யார்?

.................................................................................................................................................

52. விஷ்ணுவின் புதல்விகள் யாவர்?

.................................................................................................................................................

53. 'குணலை' என்பதன் பொருள் என்ன?

.................................................................................................................................................

54. தனி ஒருவரின் ஜென்ம சாதகத்திற் காணப்படுந் தீமை தரும் யோகம் எவ்வாறு அழைக்கப் படுகிறது?

.................................................................................................................................................

55. ஆதிசங்கரர் வாழ்ந்த காலம் என்ன?

.................................................................................................................................................

56. சிவனின் ஏழுவகைத் தாண்டவங்களுள் ஒன்றான சங்கார தாண்டவம் வேறு எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

.................................................................................................................................................

57. ஆயிரம் பிறைகண்ட பெரியவருக்கு அவரது எண்பது வயது நிறைவு ஆண்டிலே செய்யப்படுஞ் சடங்கு எது?

.................................................................................................................................................

58. ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தியின் தாசனாகிய ஆஞ்சநேயரின் கலியுக அவதாரமாகக் கருதப்படுபவர் யார்?

.......................................................................................................................................

59. 'கைலாய நாதர் சதகம்' என்னும் நூலின் ஆசிரியர் யார்?

.......................................................................................................................................

60. 'கைவல்லிய நவநீதம்' என்னும் நூலின் ஆசிரியர் யார்?

.......................................................................................................................................

61. 'கோயிற்புராணம்' என்னும் நூலின் ஆசிரியர் யார்?

.......................................................................................................................................

62. பாற்கடல் கடைந்த வேளையிற் தோன்றியதாகக் கருதப்படும் விண்மணியின் பெயர் என்ன?

.......................................................................................................................................

63. சிவன் ஆடிய தாண்டவங்களில் அன்னை கௌரியே ஏதுவாக அமைந்த தாண்டவத்தின் பெயர் என்ன?

.......................................................................................................................................

64. சூரபன்மனின் மனைவி பெயர் என்ன?

.......................................................................................................................................

65. அயிராணி என்பவள் யார்?

.......................................................................................................................................

66. கந்தபுராணத்தில் அகத்தியரால் வதஞ்செய்யப்பட்ட அசுரர்களின் பெயர்களைத் தருக.

.......................................................................................................................................

67. சூரபன்மனின் உத்தரக் கிரியைகளைச் செய்த அவன் குலத்தோன்றல் யார்?

.......................................................................................................................................

68. சுந்தரருக்காக இறைவன் திருவோடேந்திய பதி எதி?

.......................................................................................................................................

69. இறைவன் நாவுக்கரசுருக்குப் பொதிச்சோறு கொடுத்த பதி எது?

.......................................................................................................................................

70. திருஞானசம்பந்தர் தன் திருமணத்தின் போது இறைவன் திருவருளை வேண்டிப் பாடிய பதிகம் எது?

.......................................................................................................................................

71. நாவலர் பெருமான் சைவ வினாவிடை முதற் புத்தகம் பதிப்பித்த ஆண்டு எது?

.......................................................................................................................................

72. திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?

.......................................................................................................................................

73. மூதுரை எனும் நூலுக்கு வழங்குகின்ற மறுபெயர் என்ன?

.......................................................................................................................................

74. 'தவமென்று சொல்லப்படுவது ஒரு சீவனை வதைசெய்து அதன் மாமிசத்தைப் புசிக்காமையேயாகும்' என்ற கருத்தைக் கூறும் கொன்றை வேந்தன் பாடல் எது?

.......................................................................................................................................

75. நாவலர் பெருமான் அருளிய சிவபூசைத் திரட்டின் காப்புச் செய்யுளை எழுதுக.

.......................................................................................................................................

76. "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனக் கூறிய நாயனார் யார்?

.......................................................................................................................................

77. "பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி" எனப் பாடியவர் யார்?

.......................................................................................................................................

78. பூஜை செய்யும்போது சிவாசாரியார் நிற்கவேண்டிய திக்குகள் பற்றிக் கூறும் புராணம் எது?

.......................................................................................................................................

79. திருச்சிராப்பள்ளியில் உள்ள சிவனுக்கென்று ஒரு முனிவர் வைத்திருந்த செவ்வந்திப் பூவைப் பிறிதொருவர் எடுத்து அணிந்ததால் மண்மாரி பொழிந்தது என்ற வரலாறு உண்டு. இவ் வரலாற்றுக் கதையில் வரும் முனிவரின் பெயரென்ன?

.......................................................................................................................................

80. அர்க்கியம் என்றால் என்ன?

.......................................................................................................................................

81. எண்ணெய் தேய்த்துக் குளிக்க உகந்த நாட்களாக ஆடவர்களுக்கென்றும் பெண்களுக் கென்றும் நாவலர் பெருமான் கூறிய நாட்களைக் குறிப்பிடுக

.......................................................................................................................................

82. சித்து என்பதன் பொருள் யாது?

.......................................................................................................................................

83. இறைவனை நோக்கி "ஓலம் ஓலம்" என வேண்டுவார்கள். இங்கு 'ஓலம்' என்பதன் பொருள் என்ன?

.......................................................................................................................................

84. கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவை தவிர்ந்த, புராண படனஞ் செய்யத்தக்க புராணங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

.......................................................................................................................................

85. ஏழுவகைத் தாண்டவங்களுள் 'ஆனந்த தாண்டவம்' உணர்த்துவது எதனை?

.......................................................................................................................................

86. 'முத்திநகரம்' எனப் போற்றப்படுவது எது?

.......................................................................................................................................

87. நவதானியம் நவக்கிரகங்களுக்குரிய தானியமாகக் கொள்ளப்படுகிறது. இதில் 'நெல்' எந்தக் கிரகத்திற்குரியது?

.................................................................................................................................

88. தமிழரசர் காலத்தில் நல்லூரில் அமைந்திருந்த கைலாயநாதர் கோயில் பற்றிக்கூறும் நூல் எது?

.................................................................................................................................

89. சப்புமல் குமாரன் யாழ்ப்பாண இராச்சியத்தை எத்தனையாம் ஆண்டு கைப்பற்றினான்?

.................................................................................................................................

90. நல்லூர்க் கோயிலிற் கட்டியங் கூறப்படுவதிலிருந்து, அவ்வாலயத்தை அமைந்தவன் யாரெனக் கூறப்படுகிறது?

.................................................................................................................................

91. நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் முதற் பூசகர் யார்?

.................................................................................................................................

92. நல்லூர் உற்சவத்தின் பதினாறாம் நாள் உற்சவத்தின் பெயர் என்ன?

.................................................................................................................................

93. கந்தபுராணத்தின் இறுதிக் காண்டம் எது? இறுதிப்படலம் எது?

.................................................................................................................................

94. கந்தப் பெருமானின் தேரின் பெயர் என்ன?

.................................................................................................................................

95. 'நாட்டிய சாத்திரம்' எனும் நூலை வடமொழியில் இயற்றியவர் யார்?

.................................................................................................................................

96. சிவபுராணங்கள் எவை?

.................................................................................................................................

97. புலியூர்ப் புராணம் பாடியவர் யார்?

.................................................................................................................................

98. நல்லூர் ஆலயத்தின் குபேரவாசல் எனப் போற்றப்படும் வடக்குக் கோபுரம் எப்போது திறந்துவைக்கப்பட்டது?

.................................................................................................................................

99. தர்ப்பைப் புல்லினால் மோதிரம் போலச் செய்யப்பட்டு அணிவிரலில் அணியப்படுவது எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

.................................................................................................................................

100. நாவலர் பெருமான் வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலிற் தனது முதற்பிரசங்கம் நிகழ்த்தியது எப்போது?

.................................................................................................................................